இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

கடந்த கால கொடுஞ்செயல்களை நினைவில் கொள்வதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டிய திருத்தந்தை, அதேவேளையில், "மிகவும் இரக்கமுள்ள மற்றும் அமைதியான எதிர்காலத்தை உருவாக்க உழைக்க வேண்டும்" என்ற வேண்டுகோளையும் விடுத்தார்.

# திருஅவை அனைத்து வகையான யூத எதிர்ப்புகளையும் நிராகரிக்கிறது!



ஐக்கிய நாடுகள் அவை 2005-ஆம் ஆண்டு ஜனவரி 27-ஆம் தேதியை பன்னாட்டு பெரும் இன அழிப்பு (Holocaust) நினைவு நாளாக அறிவித்தது. 2026-ஆம் ஆண்டில், 'மனித மாண்பு மற்றும் உரிமைகளுக்காகப் பெரும் இன அழிப்பை நினைவுகூர்தல்' என்ற கருப்பொருளுடன் 25-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

"கத்தோலிக்கத் திருஅவை அனைத்து வகையான யூத எதிர்ப்புகளையும் நிராகரிக்கின்றது" என்று கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

ஜனவரி 27, செவ்வாயன்று, பன்னாட்டு பெரும் இன அழிப்பு நினைவு நாள் (Holocaust) நினைவுகூரப்பட்ட வேளை இவ்வாறு கூறிய திருத்தந்தை, 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் - பெரும்பாலும் யூதர்கள் - கொல்லப்பட்ட ஆஷ்விட்ஸ்-பிர்கெனாவின் விடுதலையின் 81-ஆம் ஆண்டையும் நினைவில் கொண்டார்.

தனது அதிகாரப்பூர்வ சமூக ஊடகக் கணக்கில் இதுபற்றி எழுதியுள்ள திருத்தந்தை, இனம், தேசியம் அல்லது மதம் சார்ந்த பாகுபாட்டை எதிர்ப்பதற்கு Nostra Aetate அதாவது, 'நமது காலத்தில்' என்று பொருள்படும் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தால் (1965) வெளியிடப்பட்ட ஆவணத்தின் கீழ் திருஅவையின் உறுதிப்பாட்டை மேற்கோள் காட்டினார். (Nostra Aetate என்பது கிறிஸ்தவமல்லாச் சமயங்களோடு திருஅவைக்குள்ள உறவு பற்றிய இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்க ஏடு)

நியூயார்க்கிலும் பிற இடங்களிலும் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெறும் நிகழ்வுகள், தூதரக அரசு அதிகாரிகள், பெரும் இன அழிப்பில் உயிர் பிழைத்தவர்கள் மற்றும் பொதுமக்களை ஒன்றிணைத்து, பாதிக்கப்பட்டவர்களை கௌரவிக்கவும், உயிர் பிழைத்தவர்களின் சாட்சியங்களைப் பாதுகாக்கவும் உதவுகின்றன.

உலகளவில் அதிகரித்து வரும் யூத எதிர்ப்பு மற்றும் பெரும் இன அழிப்பு மறுப்பு பற்றிய எச்சரிக்கைகளுக்கு மத்தியில், எதிர்கால இனப்படுகொலையைத் தடுப்பதில் கல்வியை ஒரு முக்கிய கருவியாக ஐக்கிய நாடுகள் அவையும் அதன் துணை நிறுவனங்களும் வலியுறுத்துகின்றன.

அண்மைய ஆண்டுகளில் வெறுப்புணர்வைத் தூண்டும் பேச்சுக்கள் 400 விழுக்காடு அதிகரித்துள்ளதாக ஐரோப்பிய அறிக்கை ஒன்று கூறுகிறது. கடந்த காலத்தை நினைவில் கொள்வது மறுப்பை எதிர்த்துப் போராடவும், வெறுப்பை எதிர்கொள்ளவும், ஐ.நா. நிலைநிறுத்தும் மனித உரிமைகளை ஆதரிக்கவும் உதவும் என்று அதிகாரிகள் தெரிவிகின்றனர்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# அமைதி மற்றும் ஒன்றிப்புக்காகக் குரல் எழுப்ப வேண்டும்!


தொலைக்காட்சிக்கு பேட்டி அளிக்கும் திருத்தந்தை (கோப்புப் படம்)

"மத்திய கிழக்கில் இடம்பெற்று வரும் பதட்டங்களுக்கு மத்தியில் அமைதிக்காக உலகச் சமூகம் தனது குரலை எழுப்ப வேண்டும்" என்று அழைப்பொன்றை விடுத்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

ஜனவரி 27, செவ்வாயன்று, திருத்தந்தையர்களின் கோடைகால ஓய்விடமான காஸ்தல் கந்தோல்போவில் இத்தாலிய தொலைக்காட்சிக்கு அளித்த ஒரு சுருக்கமான மற்றும் உணர்வுப்பூர்வமான அறிக்கையொன்றில், இவ்வாறு அழைப்பு விடுத்தார் திருத்தந்தை.

அதிகரித்து வரும் இராணுவ இருப்பு பற்றி, குறிப்பாக பாரசீக வளைகுடாவில் விமானம் தாங்கி கப்பலான ஆபிரகாம் லிங்கனுடன் அமெரிக்க கடற்படை தாக்குதல் குழு குறித்து செய்தியாளர்கள் திருத்தந்தையிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த திருத்தந்தை, "பிரச்சனைகளைத் தீர்க்க வன்முறையை விட உரையாடலை எப்போதும் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்ற அமைதிக்கான ஒரு வலிமைவாய்ந்த வேண்டுகோளை விடுத்த அதேவேளை, அதற்காக இறைவேண்டல் செய்யவேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

உலகம் ஹோலோகாஸ்ட் எனப்படும் பெரும் இன அழிப்பு நினைவு நாளை அனுசரிக்கும் வேளையில், அனைத்து வகையான யூத எதிர்ப்புக்கும் எதிராகப் போராடுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி சிந்திக்கவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார் திருத்தந்தை.

கடந்த கால கொடுஞ்செயல்களை நினைவில் கொள்வதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டிய திருத்தந்தை, அதேவேளையில், "மிகவும் இரக்கமுள்ள மற்றும் அமைதியான எதிர்காலத்தை உருவாக்க உழைக்க வேண்டும்" என்ற வேண்டுகோளையும் விடுத்தார்.

மத்திய கிழக்கில் பதட்டங்கள் அதிகரித்து வரும் சூழல் குறித்து பேசிய திருத்தந்தை, அப்பாவி உயிர்கள் மீதான வன்முறையின் தாக்கத்தை தனிநபர்கள் கருத்தில் கொள்ளவும், உரையாடல் மூலம் அமைதியான தீர்வுகளைத் தேடவும் வலியுறுத்தினார்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# திருஅவையின் நம்பகத்தன்மை என்பது சான்று பகிர்வதில் உள்ளது!


திருப்பலி நிறைவேற்றும் கர்தினால் பியெத்ரோ பரோலின்

"எதிர்ப்பு மற்றும் வெளிப்படையான தோல்வி இருந்தபோதிலும், நற்செய்திப் பணியைத் தேர்ந்தெடுப்பதில் அன்ஸ்கரின் துணிவைக் கொண்டிருந்தார்" : கர்தினால் பியெத்ரோ பரோலின்

"திருஅவையின் நம்பகத்தன்மை என்பது, அதிகாரத்தில் அல்ல, மாறாக, சான்று பகிர்வதில் உள்ளது!" என்று உறுதிப்படக் கூறினார் திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின்.

டென்மார்க் புனித அன்ஸ்கரின் மறைப்பணியின் 12-வது நூற்றாண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், ஜனவரி 25, ஞாயிறன்று, கோபன்ஹேகனின் பேராலயத்தில் நிகழ்ந்த திருப்பலியின் போது இவ்வாறு தெரிவித்தார் கர்தினால் பரோலின்.

இந்தக் கொண்டாட்டங்களுக்கான திருத்தந்தையின் தூதராக சென்ற, கர்தினால் பரோலின் அவர்கள், "திருஅவையின் நம்பகத்தன்மை என்பது அதிகாரம், எண்ணிக்கை அல்லது வியூகங்களில் வேரூன்றி இருக்கவில்லை, மாறாக விடுதலை, நீதி மற்றும் இரக்கத்தின் செயல்கள் மூலம் விசுவாசத்தின் உயிருள்ள சான்றுபகர்தலில் உள்ளது" என்று வலியுறுத்திக் கூறினார்.

கிபி 9-ஆம் நூற்றாண்டில் வடக்கு ஐரோப்பாவில் தனது பணியைத் தொடங்கிய ஆசீர்வாதப்பர் (பெனடிக்டைன்) துறவு சபையைச் சேர்ந்த புனித அன்ஸ்கரின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில், சுதந்திரம் மற்றும் மனித மாண்பிற்கான அவரின் அர்ப்பணிப்பை எடுத்துரைத்தார் கர்தினால் பரோலின்.

"டென்மார்க்கில் துறவியின் முதல் செயல் அடிமைகளை மீட்பதாகும்" என்று குறிப்பிட்ட கர்தினால், "புதிய வடிவிலான அடிமைத்தனம் மற்றும் விலக்குகளால் குறிக்கப்பட்ட உலகில் இன்றும் பொருத்தமான செயலாக இது இருக்கிறது" என்றும் எடுத்துக்காட்டினார்.

எசாயா நூலில் (52:7-10) இறைவார்த்தைகளை மேற்கோள் காட்டிய கர்தினால், "மீட்பு மற்றும் மாற்றத்தின் நற்செய்தியைக் கொண்டுவரும் திறனில்தான் திருத்தூதரின் உண்மையான மதிப்பு உள்ளது" என்று சுட்டிக்காட்டினார்.

எதிர்ப்பு மற்றும் வெளிப்படையான தோல்வி இருந்தபோதிலும், நற்செய்திப் பணியைத் தேர்ந்தெடுப்பதில் அன்ஸ்கரின் துணிவை அடிக்கோடிட்டுக் காட்டிய கர்தினால், "திருஅவை எண்ணிக்கையின் மூலம் அல்ல, மாறாக விசுவாசம் மற்றும் விடாமுயற்சியின் வாழ்க்கை மூலம் வளர்கிறது" என்று எடுத்துக்காட்டினார்.

"சவால்களை எதிர்கொள்ளும்போது புதுப்பிக்கப்பட்ட நற்செய்தி அறிவிப்பு வலிமையையும், நம்பிக்கையையும் அவசியம்" என்றும், "விசுவாசிகள் அன்ஸ்கரின் முன்மாதிரியைப் பின்பற்றி ஒவ்வொரு சூழ்நிலையிலும் கிறிஸ்துவுடன் பயணிக்க வேண்டும்" என்றும் கூறி தனது மறையுரையை நிறைவு செய்தார் கர்தினால் பரோலின்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டம் (MJD): முதல் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மன்றம் உதயம்

குளுவாங்: சமீபத்தில் குளுவாங் புனித லூயிஸ் ஆலயத்தில், மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் (MJD) ஆயர், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலைத் தலைவர்கள் உட்பட 50-க்கும் மேற்பட்டோர் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டத்திற்காக ஒன்றுகூடினர். இந்த நாள் இறைவேண்டல், பகிர்வு மற்றும் "திருச்சபையாக இணைந்து பயணிப்போம்" என்ற புதிய உறுதியுடன் அமைந்தது.

மறைமாவட்டத்தின் முதல் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மன்றத்தை (Diocesan Pastoral Council) அதிகாரப்பூர்வமாக நிறுவுவதற்காக இக்கூட்டம் நடைபெற்றது. இதில் 30-க்கும் மேற்பட்ட பொதுநிலை உறுப்பினர்கள், 16 குருக்கள், 3 கன்னியர் மற்றும் 2 செமினாரியன்கள் கலந்து கொண்டனர். இது 2026-ஆம் ஆண்டின் மறைமாவட்ட மையக்கருத்தான "MJD: இணைந்து பயணிக்கும் ஒரு மறைமாவட்டம்" என்பதற்கு வலுசேர்க்கும் வகையில் அமைந்தது.

மறைமாவட்ட மேய்ப்புப்பணி இயக்குனர் அருட்பணியாளர் டாக்டர் லாரன்ஸ் எங் உரையாற்றுகையில், "சினோட் வழிமுறை" என்பது வெறும் வார்த்தை அல்ல, அது ஒரு வாழ்க்கை முறை என்றார். திருச்சபையில் முடிவுகள் மேலிருந்து கீழ் திணிக்கப்படாமல், அனைவரும் இணைந்து பொறுப்பேற்க வேண்டும். ஒரு ஆலயத்தில் கழிப்பறை பழுதானால் கூட குருவையே அழைக்கும் நிலையை மாற்றி, திருச்சபையின் வளர்ச்சிக்கு ஒவ்வொரு உறுப்பினரும் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டும் என்று அவர் நகைச்சுவையுடன் குறிப்பிட்டார்.

மறைமாவட்ட மேய்ப்புப்பணி மன்றத்தின் புதிய நிர்வாகிகள் அறிமுகம் செய்யப்பட்டனர்:

தலைவர்: பிரான்சிஸ் சுவா (மலாக்கா வட்டார மேய்ப்புப்பணி மன்றத் தலைவர்)

துணைத் தலைவர்: மார்க் அந்தோணி (தெற்கு ஜொகூர் வட்டார மேய்ப்புப்பணி மன்றத் தலைவர்)

செயலாளர்: ஜேம்ஸ் லீ (வட மத்திய ஜொகூர் வட்டார மேய்ப்புப்பணி மன்றத் தலைவர்)

தலைவர் பிரான்சிஸ் பேசுகையில், இந்த புதிய பொறுப்பை முழுமையாகப் புரிந்து கொண்டு, என்னால் முடிந்த சிறந்த சேவையை வழங்க ஆவலாக உள்ளேன் என்றார். ஆயர் மேதகு பெர்னார்ட் பால் அவர்கள், 2026-இல் நடைபெறவுள்ள மலேசிய மேய்ப்புப்பணி மாநாட்டை (MPC 2026) கருத்தில் கொண்டு உரையாற்றினார். சினோட் வழிமுறையின் மூன்று முக்கிய தூண்களை அவர் வலியுறுத்தினார்:

1. கூட்டுறவு (Communion)
2. பங்கேற்பு (Participation)
3. நற்செய்திப் பணி (Mission)

மேலும் குடும்பம், சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் திருச்சபை ஆகிய நான்கு துறைகளில் நாம் இணைந்து செயல்பட வேண்டும் என்றும், தூய ஆவியாரின் வழிகாட்டுதலுடன் மறைமாவட்டம் முன்னேற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். ஜூலை 18: அடுத்த மறைமாவட்ட மேய்ப்புப்பணி மன்றக் கூட்டம் நடைபெறும். நவம்பர் 24 – 26: மஜோடி (MAJODI) மையத்தில் மறைமாவட்டத்தின் அனைத்து குருக்கள் மற்றும் பங்கு மேய்ப்புப்பணி மன்ற உறுப்பினர்கள் பங்கேற்கும் பிரம்மாண்டமான ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெறும்.



# பெஸ்தாரி ஜெயா புனித வனத்து பவுல் தேவாலயத் திருவிழா





பெஸ்தாரி ஜெயா: இப்பங்கின் பாதுகாவலரான புனித வனத்து பவுலின் (St. Paul the Hermit) திருவிழா, ஜனவரி 15 முதல் 18 வரை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கி.பி 227-341 காலப்பகுதியில் வாழ்ந்த புனித வனத்து பவுல், திருச்சபையின் முதல் வனத்துறவியாகவும், தனிமைத் தியானம் மற்றும் செப வாழ்விற்குச் சிறந்த முன்மாதிரியாகவும் போற்றப்படுகிறார்.

ஜனவரி 15 (தொடக்க நாள்): திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. கிள்ளான் துணைப்பங்குத்தந்தை அருட்பணியாளர் ஞானசெல்வம் பெரண்டிஸ் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. "ஆண்டவரே, உமது பேரன்பினால் எங்களை மீட்டருளும்" என்ற தலைப்பில் அவர் மறையுரையாற்றினார். இதில் சுமார் 150 விசுவாசிகள் கலந்துக்கொண்டனர்; குழந்தைகளுக்குத் தனிப்பட்ட ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது.

ஜனவரி 16: காஜாங் பங்குத்தந்தை அருட்பணியாளர் போனவெஞ்சர் ராயப்பன் "எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் செல்" என்ற தலைப்பில் மறையுரையாற்றினார். இறைவனின் குணப்படுத்தும் வல்லமையை ஏற்று, விசுவாசத்தில் முன்னேறிச் செல்ல அவர் அழைப்பு விடுத்தார்.

ஜனவரி 17: சுமார் 400-க்கும் மேற்பட்ட விசுவாசிகள் ஜெபமாலை, நவநாள் திருப்பலியில் பங்கேற்றனர். பினாங்கு குருத்துவக் கல்லூரியின் (College General) அருட்பணியாளர் சுரேன் துரை ராஜ், "உன்னை வேற்றினத்தாருக்கு ஒளியாக்குவேன்" என்ற கருப்பொருளில் மறையுரையாற்றினார். நற்செய்தியை அன்றாட வாழ்வில் கடைப்பிடித்து, கிறிஸ்துவின் ஒளியாகத் திகழ வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

திருப்பலியைத் தொடர்ந்து, பங்குத்தந்தை அருட்பணியாளர் ஜேம்ஸ் கேப்ரியல் மற்றும் அருட்பணியாளர் சுரேன் ஆகியோர் தலைமையில் நற்கருணை ஆராதனையும், நற்கருணை பவனியும் நடைபெற்றன. குகை போன்ற அமைப்பில் வைக்கப்பட்டிருந்த புனித வனத்து பவுலின் திருசுரூபத்திற்குத் தூபம் காட்டப்பட்டு மரியாதைச் செய்யப்பட்டது.

ஜனவரி 18 அன்று ஞாயிறு திருப்பலியுடன் திருவிழா நிறைவுற்றது. நற்கருணை ஆராதனைக்குப் பின் கொடியிறக்கம் செய்யப்பட்டது. விழா நாட்களில் வழங்கப்பட்ட சமபந்தி விருந்து, பங்கு மக்களிடையே ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் ஆழப்படுத்தியது. இக்கொண்டாட்டங்களில் செமினேரியன் சகோதரர் சேவியர் தேவன் உதவிகள் புரிந்தார்.

# பொதுக்காலம் 5ஆம் வாரம் - ஞாயிறு 8-2-2026

## கிறிஸ்துவின் சாரம் நம்மில் நிலைக்கட்டும்!

இன்று பொதுக்காலத்தின் 8-ஆம் ஞாயிறு. இன்றைய முதல் வாசகமானது, கடவுளை உண்மையாக வழிபடுவதென்பது, நாம் மற்றவர்களை, குறிப்பாக ஏழைகளையும் துன்புறுவோரையும் எப்படி நடத்துகிறோம் என்பதை அடிப்படையாகக் கொண்டது என்பதை எசாயா எடுத்துரைக்கிறார். இஸ்ரயேலர் குறிப்பாக யூதர்கள் பாபிலோனில் அடிமைகளாகத் துன்புற்ற வேளையில் புது விடியல் பிறக்கும் என்று எசாயா நம்பிக்கையூட்டுகிறார்.

மேலும், நமது வழிபாடு, வெறும் சடங்கு அனுசரிப்பு பற்றியது மட்டுமல்ல, தாராள மனப்பான்மை, பகிர்வு மற்றும் நீதி பற்றியது என்பதை நினைவில் கொள்ள அழைக்கப்படுகிறோம்.

இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் உண்மையான ஆற்றலும் ஞானமும் எங்கு காணப்படுகின்றன என்பது பற்றி விவரிக்கிறார். அவர் கொரிந்தியரை, அவர்களது சொந்தத் திறன்களையோ அல்லது புத்திசாலித்தனமான கருத்துக்களையோ நம்பாமல், கடவுளின் ஆவி மற்றும் ஆற்றலில் நம்பிக்கை வைக்க அழைக்கிறார்.

நற்செய்தியில் உலகிற்கு உப்பாக இருங்கள் என்கிறார் ஆண்டவர். லேவியர் நூல் 2:13-ல் 'நேர்ச்சையான எந்த உணவுப்படையலும் உப்பிடப்பட வேண்டும். உன் உணவுப் படையலில் கடவுளின் உடன்படிக்கையாகிய உப்பைக் குறையவிடாமல் உன் நேர்ச்சைகள் அனைத்தோடும் உப்பையும் படைப்பாயாக" என்று கூறப்பட்டிருப்பதை ஆழந்து ஆராய்ந்தால் உப்பின் அவசியம் நமக்குப் புரியும். அன்றாட உணவுக்கு உப்பு இன்றியமையாத ஒன்று. உப்பு ஒரு பானையில் இருக்கம் அனைத்து உணவு காய்கறிகளுடனும் சமமாகக் கலக்கும். எதனோடும் வேற்றுமை பாராட்டுவதில்லை. அவ்வாறே நம்மில் நாம் எவரோடும் வேற்றுமைப் பாராட்ட நமக்கு அனுமதி இல்லை. ஒவ்வொருவரும் நமது சகோதர சகோதரிகள் ஆவர்.

"உலகில் உப்பாக" இருப்பதன் மூலம், இயேசு தம்முடைய சீடர்களை உலகை நன்னெறி சிதைவிலிருந்து பாதுகாக்க அழைப்பு விடுக்கிறார். கிறிஸ்தவர்கள் (சீடர்கள்) "தங்கள் சாரத்தை இழந்தால்", அவர்கள் உலகின் பிற பகுதிகளிலிருந்து பிரித்தறிய முடியாதவர்களாகவும், தங்கள் நற்செய்தி அறிவிப்புப் பணியில் பயனற்றவர்களாகவும் போய்விடுவார்கள் என்கிறார் இயேசு.

ஆகவே, நமது நம்பிக்கையில் சாரமற்றுப் போகாமல், கிறிஸ்துவுக்கும் அவருடைய நற்செய்திக்கும் நமது நம்பிக்கையில் உறுதியாக இருக்க வேண்டும். அப்போது நம்மைச் சுற்றியுள்ள உலகத்தையே மீட்கும் கருவிகளாக நம்மால் மாற முடியும். அவ்வாறு செய்வதன் மூலம், நாம் கடவுளை மாட்சிபடுத்துவது மட்டுமல்லாமல் அவரது என்றுமுள மகிழ்ச்சியிலும் பங்கு பெறும் மக்களாவோம் என்பதை நினைவில் கொள்வோம்.

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.